20-2-1995

# மோதல் தவிர்ப்பைக் கண்காணிப்பதில் சிக்கல்

## வெளிநாட்டுகுழு கூறுகிறது

(கொழும்பு)
அரச படைகளுக்கும் விடுதலைப்புலிகள் இயக்கத்துக்குமிடையிலான மோதல தவிர்ப்பு உடன்பாடுகமார்ஒன்றரை மாதகாலமாக நடைமுறையில் இருந்து வருகின்றபோதிலும் அதில் விரிவான விதிமுறைகள் வகுக்கப்படாத

(4ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

# ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 மாசி 8 இதழ் 10
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 20-2-1995

## இரு வெளிநாட்டவரை அரசு வரவழைக்கும்

(கொழும்பு)
மோதல் தவிர்ப்பைக் கண்காணிப்பதற்கு, வெளிநாடுகளில் இருந்து மேலும் இருவரை வரவழைக்க அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

(4-ம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்தில் விரைவில் புனர்வாழ்வு நடவடிக்கை?

(கொழும்பு)
யாழ்ப்பாணத்தில் வெகு விரைவில் புனர்வாழ்வு நடவடிக்கைகளை ஆரம்பிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

நேற்றுக் கொழும்பில்

(4ம் பக்கம் பார்க்க)

# ஆயுதக் கொள்வனவு மோசடி
# முன்னாள் படைத்தளபதிகளும் விசாரணைக்குட்படுத்தப்படுவர்!

## சிசில் மீது விசாரணை ஆரம்பம்

[கொழும்பு]
இலங்கை ஆயுதப் படைகளுக்கான ஆயுத மற்றும் இராணுவ தளபாடங்கள் கொள்வனவில் இடம்பெற்றதாக கூறப்படும் ஊழல் மோசடிகள் தொடர்பாக ஒய்வுபெற்ற முப்படைத் தளபதிகளிடமும், பாதுகாப்பு செயலாளர்களிடமும் தற்போது பதவி வகிக்கும் முப்படைத் தளபதிகளிடமும் இரகசியப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் மேற்கண்ட தகவலை வெளியிட்டுள்ளார். அவர் மேலும் கூறுகையில்; இவ்விசாரணைகளின் முதற்கட்டமாக முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சிசில் வைத்தியரத்ன சி. ஐ. டி. பொலிஸாரால் விசாரிக்கப்பட்டு வருகிறார். இவரது கடவுச் சீட்டை தடுத்துவைக்கு

(4ம் பக்கம் பார்க்க)

## ஓரிரு வாரங்களில் அரசின் தீர்வுதிட்டம்

(கொழும்பு)
இனப்பிரச்னை தீர்வு தொடர்பாக அரசு முன்வைக்கவுள்ள சமாதானத் தீர்வுத்திட்டம் அடுத்த ஓரிரு வாரங்களில் தயாரிக்கப்பட்டுவிடுமென தெரிவிக்கப்படுகிறது.

தற்போது இந்தத் தீர்வுத் திட்டம் பெரும் பாலும் தயாரிக்கப்பட்டு முடிவடையும் நிலையிலிருப்பதாகவும் இதற்கு இறுதி வடிவம் கொடுப்பதிலேயே சிறிது தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இத்தீர்வுத்திட்டத்தை அரசு. விடுதலைப்புலிகள் மற்றும் தமிழ்க்கட்சிகள் உட்பட நாட்டிலுள்ள சகல கட்சிகளினதும் முன் வைக்குமெனவும் தெரிவிக்கப்படுகிறது, (சி)

## சமாதான முயற்சிகளில் அரசு ஆர்வம் இழந்துவிடவில்லை

### — அமைச்சர் கதிர்காமர்

(கொழும்பு)
இனப் பிரச்னைக்குத் தீர்வு காணும் சமாதான முயற்சியில் அரசு ஆர்வம் இழந்துவிட்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுக்களை மறுத்துள்ள வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், இந்த முயற்சியில் அரசு தொடர்ந்தும் ஆர்வம் கொண்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற வாராந்தச் செய்தியாளர் மாநாட்டில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இனப் பிரச்னைத் தீர்வு விடயத்தில் அரசு அசமந்தப் போக்கைக் கடைப்பிடிப்பதாகயாழ்ப்பாணத்தில் பெரும் கண்டனப் பேரணி நடைபெற்றுள்ளதே? எனச் செய்தியாளர் ஒருவர் கேட்டபோது, மேற்கண்டவாறு தெரிவித்த லக்ஷ்மன் கதிர்காமர், அரசின் முயற்சிகளுடன் விடுதலைப் புலிகளின் முயற்சிகளை ஒப்பிட்டால், புலிகள்தான் அரசியல் ரீதியான பேச்சுவார்த்தை

(4ம் பக்கம் பார்க்க)

## வடமராட்சிக் கடலில் இந்திய மீனவர்கள்!

### தடுக்குமாறு மகஜர்

(நெல்லியடி)
'சிறிலங்கா அரசு கடல்வலயச்சட்டத்தை ஓரளவு தளர்த்தியிருக்கும் இவ்வேளையில், இந்திய மீனவர்கள் வடமராட்சி கடற்பரப்பில் தொழில்புரிந்து எமது மீனவர்களுக்குப் பெரும் நஷ்டத்தை ஏற்படுத்தி வருவதைத் தடுப்பதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ளவும்.'

இவ்வாறு வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் திரு. சுந்தரலிங்கம் அண்மையில் கடற்றொழில் அமைச்சுக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த மகஜரின் பிரதி யாழ். அரச அதிபருக்கும், யாழ். மாவட்ட கடற்றொழில் விரி

(4-ம் பக்கம் பார்க்க)

## நாலாம் கட்டப் பேச்சில் பழைய குழுவே பங்குபற்றும்

[கொழும்பு]
விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் யாழ்ப்பாணத்தில் நடைபெறப்போகும் நான்காவது சுற்றுப்பேச்சுக்களில் முந்திய சமாதானக் குழுவில் இடம் பெற்றவர்களே இம்முறையும் பங்கு பற்றுவார்கள் என்று அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்துள்ளார்.

இதற்கான திகதி இன்ன

(4-ம் பக்கம் பார்க்க)

## சார்க் மாநாட்டை ஒத்திப் போடுக

### பாகிஸ்தான் கோருகிறது

(கொழும்பு)
சார்க் மாநாட்டை ஒத்திவைக்குமாறு பாகிஸ்தான் கோரியுள்ளதாக இலங்கை வெளியுறவு அமைச்சர் திரு. லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

(4ம் பக்கம் பார்க்க)

## இரணவிலவில் மக்கள் மீது பொலிஸார் துப்பாக்கிச் சூடு

(கொழும்பு)
இரணவிலவில அமெரிக்க ஒலிபரப்பு நிலையத்தில் பாதுகாப்பு கடமைகளை மேற்கொள்ளும் பொலிசார். நேற்றுமுன்தினமிரவு அருகே வாழும் குடியிருப்புகள் மீதும் பொது மக்கள் மீதும் கடும் தாக்குதலை நடாத்தியதாக தெரிவிக்கப்படுகிறது.

அப்பகுதியில் பொலிசார் வீடுகளை கடுமையாக சேதப்படுத்தியும். பொது மக்கள் மீது தாக்குதலை தொடுத்த

(4ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### 25-3-95 வரை செவ்வாய் வக்கிரம்

புத்தாண்டுப்பலன்கள் ரூபா 10/- எங்கும் கிடைக்கும் கைரேகை, எண்ஜோதிடம், விவாகப் பொருத்தங்கள், ஜாதகங்கள் பார்வையிட நேரிலே சந்திக்கலாம். 'சத்யா' (இடிகுண்டருகே) கட்டுடை. (சி- 1400)

### நூல்கள் கொள்வனவு

(கொழும்புத்துறை)
யாழ்ப்பாணம் மாநகர சபையினுல் யாழ். பொதுசன நூலகத்திற்கு பெறுமதியான பல நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

இவை கடந்த 1994ஆம் நிதியாண்டின் ஒதுக்கீட்டின் கீழேயே கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. -154

### 20 கோடி ரூபா சாராய மோசடி

[கொழும்பு]
முன்னைய அரசாங்கத்தின் முக்கிய புள்ளி ஒருவரது 'அரவணைப்புடன் இருபது கோடி ரூபா சாராய மோசடி நடத்தப்பட்டு வந்தது அம்பலத்துக்கு வந்துள்ளது.

இந்த மோசடி நடவடிக்கையை இலங்கை கலால் அதிகாரிகள் அம்பலப்படுத்தியுள்ளனர்! ரி

### ஒரு நேர பாடசாலை

[அச்சுவேலி]
கடந்த வருடம் தொடக்கம் இரண்டுநேரப் பாடசாலையாக செயற்பட்டுவந்த அச்சுவேலி மகாவித்தியாலயம் தற்பொழுது ஒரு நேரப்பாடசாலையாக செயற்படுகின்றது.

காலை 7 45 மணி தொடக்கம் பிற்பால் 1 45 மணிவரை பாடசாலை நடைபெறுகின்றது. -74

### சம்பளம் கிடைக்கவில்லை

(கொழும்புத்துறை)
யாழ். மயிலிட்டி மார்பு நோய் சிகிச்சை பிரிவில் தற்போது கடமைபுரியும் சகல தரப்பு ஊழியர்களுக்குமான நான்கு மாத வேதனமும் இன்று வரை ழெங்கப்படவில்லை எனத் தெர்விககப்பட்டுள்ளது. -154

### நாய்களின் தொல்லை அதிகரிப்பு

(அரியாலை)
யாழ்.நகர்ப்பகுதிகளில் நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளது, இரவு நேரங்களில் வீதிகளில் அதிகளவு கட்டாக்காலி நாய்கள் திரிவதால் மக்கள் அச்சத்துடன் நடமாடவேண்டியநிலை ஏற்பட்டுள்ளது.குறிப்பாக மானிப்பாய் வீதி, அருச்சுனு வீதிகளில் கட்டாக்காலி நாய்கள் தொல்லை இரவில் அதிகரித்துள்ளன. [59]

### சாரணர் ஸ்தாபகர் தின விழா

(வேலணை)
சாரணர் ஸ்தாபகர் தின விழா எதிர்வரும் புதன்கிழமை தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் நடைபெறவிருக்கின்றது.

காங்கேசன்துறை மாவட்டச் சாரணர் ஆணையாளர் நா. போதன் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் சாரணர் தொண்டர்களுக்கான பயிற்சிகள், அணிவகுப்புக்கள் இடம்பெறவிருக்கின்றன. சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. -75

# யாழ்தேவி என்ஜின் தீப்பிடித்தது

(கொழும்பு)
கொழும்பிலிருந்து நேற்று முன்தினம் அதிகாலை வவுனியா புறப்பட்ட யாழ்.தேவி ரெயில் அனுராதபுரத்தை நெருங்கியதும் இஞ்சின் தீப்பிடித்து கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எஞ்சின் தீப்பிடித்ததை அடுத்து பயணிகள் மத்தியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது ரெயில் எஞ்சினில் தீ பரவியதற்கான காரணம் எதுவும் உடன் தெரிவிக்கப்படவில்லை. ரி

## மாணவர்கள் உடற்தகைமைப் பயிற்சியில் பங்குபற்ற வேண்டும்

(உடுவில்)
''சகல பாடசாலை மாணவர்களும் காலையில் உடல் தகைமைப் பயிற்சியில் தவறுமல் பங்குகொள்ள வைக்க வேண்டும். வெள்ளிக்கிழமை தவிர்ந்த ஏனைய நாட்களில் சகல மாணவர்களும் இப்பயிற்சியில் கலந்துகொள்ளவேண்டும்,''

உடுவில் கல்விக் கோட்ட அதிபர்கள் கலந்துகொண்ட கூட்டத்தில் விளையாட்டுத்துறை சம்பந்தமான அறிவுரைகள் வழங்கிய விளையாட்டுத்துறை முதன்மை ஆசிரியர் எஸ். மகாலிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில், பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு. இரத்தினராசா தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

ஏனைய பாடங்களைப் போன்று உடற் கல்வி, சுகாதாரம் போன்ற பாடங்களுக்கும் விரிவான பாடத் திட்டங்கள், பாடக் குறிப்புக்கள் எழுதப்படவேண்டும என்று அவர் மேலும் தெரிவித்தார். -109

## சிவராத்திரியை முன்னிட்டு மாணவர்களுக்கிடையில் நாவன்மை போட்டி

(உடுவில்)
சுன்னுகம் இந்து சமய அபிவிருத்திச் சபையினர் மகா சிவராத்திரியை முன்னிட்டு வலிகாமம் தெற்கு பிரதேசச் செயலர் பிரிவுச்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையில் நாவன்மைப் போட்டியை நடாத்தவுள்ளனர்.

கீழ்ப் பிரிவு, மேற்பிரிவு, மத்திய பிரிவு, அதிமேற் பிரிவு என நான்கு நிலைகளில் போட்டிகள் நடைபெறும். நாவன்மைப்போட்டிகள்எதிர்வரும் 25ம்திகதி காலை சுன்னுகம் கதிரமலைச் சிவன் கோவிலில் நடைபெறும்.

ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப பெறுவோருக்கு சிவராத்திரியன்று சுன்னுகம் ஐயனுர் கோவிலில் பரிசுகள் வழங்கப்படும். இப் போட்டிக்கான விண்ணப்ப முடிவுத் திகதி எதிர்வரும் 23ம் திகதி என அறிவிக்கப்பட்டுள்ளது. .109

# நோய் ஏற்படுதலை தடுக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)
நகர்ப்புற அடிப்படைச் சேவைகள் நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ், யாழ். மாநகரசபை பகுதியில் வயிற்ருேட்டத்தினுலும், குடல் சார்ந்த நோய்களினுலும் ஏற்படும் நோய் வாய்ப்படுதலைக் குறைக்கும் திட்டம் இவ்வருடம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

குடல் சார்ந்த நோய்கள் கூடுதலாகக் காணப்படும் இடங்களை முன்னுரிமை அடிப்படையில் இனம்கண்டு அங்கு சுகாதாரம்பற்றிய விழிப்பை ஏற்படுத்துவது, மலகூடம் இல்லாத வீடுகளுக்கு மலகூடம் அமைப்பது ஆகியன இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் முதற்படியாக சகலவெளிக்கள சுகாதார ஊழியர்களுக்கும் இந்நோய் சம்பந்தமான பயிற்சி நடாத்தப்பட்டது.

## தென்மராட்சியில் கோழி நோய்க்கு இலவசமாக தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)
கோழி வளர்ப்பினை ஊக்குவிக்குமுகமாக யாழ். மாவட்டத்தில் தென்வராட்சிப் பகுதியில் பல்வேறு இடங்களிலும் இலவச கோழிநோய் தடுப்பூசிகள் போடுவதற்கான நடவடிக்கையினை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் மேற்கொண்டுள்ளனர்.

இந்தவகையில் நாளை 21ம் திகதி காலை 9 மணி முதல் 11 மணிவரை புலோப்பளை பிரதாபன் சனசமூக நிலையத்திலும், 24ம் திகதி காலை 9 மணிமுதல் 11 மணி வரை இடைக்குறிச்சி சண்முகானந்தா சனசமூக நிலையத்திலும் 25ம் திகதி காலை 9 மணிமுதல் 12 மணிவரை எழுதுமட்டுவாள் தெற்கு கிராமிய உற்பத்திக்குழு காரியாலயத்திலும் வைத்து போடப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கால்நடை வைத்தியர்களின் உதவியுடன் தென்மராட்சிப் பகுதியில் பல இடங்களிலும் ஏற்றப்பட்டுவரும் தடுபபூசிகளை ஏற்றி உங்கள் கோழிகளை கொள்ளை நோயிலிருந்து பாதுகாக்குமாறு கோழி வளர்ப்பாளர்களிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சேதமடைந்த பகுதிகளை வாசு குழு பார்வையிட்டது

(யாழ்ப்பாணம்)
யாழ் நகர்ப் பகுதியில் இராணுவ நடவடிக்கையால் சேதமடைந்த பகுதிகளை திரு. வாசுதேவ நாணயக்கார தலைமையிலான சமாதானக்குழு நேற்று முன்தினம் மாலை பார்வையிட்டது.

கோட்டைப் பகுதியையும் யாழ். பொதுநூல் நிலையம் மற்றும் இதனை அண்டிய பல பகுதிகளையும் இக் குழுவினர் பார்வையிட்டனர்.

இவர்களுடன் சென்ற கொழும்பு மற்றும் வெளிநாட்டுப்பத்திரிகையாளர்கள் இப் பகுதிகளை படமெடுத்தனர். இப்பகுதி அடைந்த சேதங்கள் குறித்தும் இக் குழுவினர் தகவல்களையும் சேகரித்தனர். சி

### மினிபஸ் சேவை

(கொழும்புத்துறை)
யாழ்ப்பாணம், குருகர், பாஷையூர், கொழும்புத்துறை, மணியம் தோட்டம் ஆகிய பகுதிகளுக்கு கடந்த வாரம் தொடக்கம மினிடஸ் சேவை காலை முதல் மாலை வரை தொடர்ந்து நடைபெற்று வருகிறது. -154

### பற்சிகிச்சை

[கொழும்புத்துறை]
யாழ். அராலிமேற்கு கோட்டைக்காட்டில் அமைந்துள்ள அரசினர் கிராமமத்திய வைத் வைத்தியசாலையில் இந்தவருடம் தொடக்கம் பற்சிகிச்சையும் வாரத்தில் ஒரு நாள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 154

### விபூதித் திருநாள்

(அரியாலை)
கத்தோலிக்க கிறிஸ்தவ மக்களின் தவக்கால ஆரம்ப தினமாக அனுஷ்டிக்கப்படும் விபூதித் திருநாள் எதிர்வரும் மார்ச் முதலாம் திகதி புதன் கிழமை ஆரம்பமாகின்றது. அன்றையதினம் காலை திருப்பலியில் குருவானர் விபூதியை மக்களின் நெற்றியில் பூசும் சடங்கும் நடைபெறும். - 59

### ஜெயந்தி விழா

(பண்டத்தரிப்பு)
சுவாமி விவேகானந்தரின் ஜெயந்தி விழா அண்மையில் பண்டத்தரிப்பு பிரதேச இந்து தாலிபர் சங்கத்தினுல் கொண்டாடப்பட்டது. சங்கத்தலைவர் திரு கோ. வாமதேவன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பிரதம அதிதியாக யாழ். மாவட்ட இந்து சமயப்பேரவை பதில் தலைவர் திரு. ஆ. மகாலிங்கம் கலந்து கொண்டார். -72

### நூல்கள் அன்பளிப்பு

(பருத்தித்துறை)
பருத்தித்துறை ஸ்ரீ ராம கிருஷ்ண சாரதா சேவாச்சிரம, பருத்தித்துறை பிரதேசசபை புலோலி பொது நூல்நிலையத்திற்கு சமய நூல்களை அன்பளிப்புச் செய்துள்ளது.இந்நூல்கள் அன்பளிப்பு விழா பொதுநூலக மண்டபதில் பருத்தித்துறை விசேட ஆணையாளர் திரு. ஆறுமுக சுவாமி தலைமையில் நடைபெற்றது. - 52

### அன்னை பூபதி பொது அறிவுத்தேர்வு

(யாழ்ப்பாணம்)
தமிழீழ அன்னை பூபதி பொது அறிவுத் தேர்வுக்கான நுழைவுப் படிவங்கள் சகல கோட்டங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இன்று 20ம் திகதி திங்கட்கிழமை பாடசாலை அதிபர்கள் பெந்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறுர்கள்.

மேலும் இது தொடர்பான அறுவுறுத்தல் கடிதமும் இத்துடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. ஆகவே அறிவுறுத்தலின் பிரகாரம் 28-2-95ல் மீளவும் அவற்றை கோட்டத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். ரி

### பாடசாலை திருத்தம்

(ஆனைப்பந்தி)
அண்மையில் மாணவர் மீது சரிந்து விழுந்த கெற்பலி பண்டிதர் குடியிருப்பு பாடசாலைக் கொட்டகை திருத்தியமைக்கப்பட்டுள்ளது. - 101

### மருந்து தட்டுப்பாடு

(நெல்லியடி)
பருத்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் சிறுவர்களுக்கான போலியோ மருந்துககும், ஏற்புத்தடை மருந்துக்கும் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது. -160

### பயிற்சித் திட்டம்

(கொழும்புத்துறை)
ரெட்பாணு மற்றும் நோர்வே தொண்டர் நிறுவனம் ஒன்றினுல் வடக்கு கிழக்கில் விதவைகள், சிறுவர்களுக்கான பயிற்சித் திட்டமொன்று ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிய வருகிறது. - 154

### சிறுவர் கட்டுரை மாலை

(கொழும்புத்துறை)
ஆசிரியர் திரு. த. நாகேஸ்வரன் எழுதிய ''சிறுவர் கட்டுரை மாலை'' என்ற நூலை சரசாலை இந்துமன்றச் செயலாளர் திரு க. சிவசங்கரநாதன் அண்மையில் சம்பிரதாய பூர்வமாக வெளியிட்டுவைத்தார். 154

### வீட்டுத்தோட்ட செயல்முறை வேலைத்திட்டம்

[உடுவில்]
யாழ்ப்பாண மாவட்ட கல்வித் திணைக்களமும் சிறுவர் பாதுகாப்பு நிதியமும் (யு கே) இணைந்து நடத்தும் வீட்டுத் தோட்ட செயல்முறை வேலைத் திட்டம் பத்தொன்பது பாடசாலைகளில் தற்போது செயற்படுத்தப்பட்டு வருவதாகதெரிவிக்கப்படுகிறது. 109

### பேச்சுப் போட்டி

[கொழும்புத்துறை]
சரசாலை-நுணுவில் ஸ்ரீ சிதம்பர விநாயகர் கோவில் கூட்டுப் பிரார்த்தனை சபையும், சரசாலை இந்து மன்றமும் கூட்டாக இணைந்து நடாத்தும் மஹாசிவராத்திரிதினப் பேச்சுப் போட்டிகள் எதிர்வரும் 27ம் திகதி திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு சரசாலை-நுணுவில் ஸ்ரீ சிதம்பர விநாயகர் ஆலய மண்டபத்தில் இடம் பெறும். 154

### நீர் இறைக்கும் கருவி வழங்கப்பட்டது

[பண்டத்தரிப்பு]
சித்தன்கேணியில் இயங்கி வரும் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி மாணவரின் குடிதண்ணீர் வசதி கருதி கையால் நீர் இறைக்கும் கருவி ஒன்றை வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம் அமைத்துக் கொடுத்துள்ளது,

சித்தன்கேணி கணேச வித்தியாலயத்திற்கும் இதே போன்ற நீர்இறைக்கும் கருவியை அமைத்துக் கொடுத்துள்ளது. 72

**மணிவாக்கு**

அறியாமை இரகசியத்தின் தம்ப துன்பத்-பத்தின் பிறப்பிடம்: குருட்டு நம்பிக்கையின் அன்னை அழிவும் வறுமையும் வாழும் தாயகம்

இங்கர்சால்

## நமது நோக்கு

**கோயிற் புனிதம்!**

இந்துக் கோயில்களில் உள்ள இராணுவ முகாம்களை அகற்றுமாறு இந்து சமயப் பேரவை கோரிக்கை விடுத்துள்ளது.

ஒரு நாட்டு இராணுவம் பொதுமக்கள் பாதுகாப்பில் ஈடுபட்டுள்ளதா அல்லது அடக்குமுறை நடவடிக்கைகளிலும், ஆக்கிரமிப்பிலும் ஈடுபட்டுள்ளதா என்பதை எப்படி அறியலாம்?

விஞ்ஞான ரீதியாக அமிலச் சோதனை (Acid Test) செய்வது போல உள்ள நிலையை எப்படிக் கண்டறியலாம்?

இராணுவம்தங்கியுள்ள இடங்கள் எவை? என்ன செய்கிறார்கள்! என்பதைக் கண்டறிந்தால் இலங்கை இராணுவம் கோவில்கள், பாடசாலைகள் அகியவற்றில்தங்கியிருந்து கொண்டு மக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருப்பதாகவே செய்திகள் வருகின்றன.

கனரகவாகனங்களோடு எறிகணைத் தாக்குதல்களோடு படையினர் முன்னேறிய போது நடந்த தென்ன?

மக்கள் பயப்பீதியோடு உயிரைக் காப்பாற்ற ஓடி வெளியேறியபோது வீடு வாசல்களை மாத்திரமா விட்டு வந்தனர்?

தமது ஆன்மீக வளர்ச்சிக்காகவும் அமைதிவாழ்க்கைக்காகவும் அமைக்கப்பட்ட கோவில்களையும் அறிவாலயங்களாகத் திகழ்ந்த பாடசாலைகளையும் விட்டு வந்தார்கள்.

கோவில்களிலும், பாடசாலைகளிலும் பாதுகாப்பு அரண் அமைத்ததால் தங்கியிருந்ததால் அவற்றின் புனிதம் பேணப்பட்டதா?

ஒரு இன மக்களின் மொழி, மதம் என்பன பேணப்பட வேண்டியது அரசின் கடமை.

அக்கடமையை மீறும் எத்தகைய நடவடிக்கையும் மனித உரிமை மீறலாக கணிக்கப்படும் என்பது தான் ஐ. நா. சாசனத்திற் காணப்படும் அம்சங்களில் ஒன்று என்பதை இங்கு பல தடவைகள் சுட்டிக்காட்டியிருந்தோம்.

எனவேதான் சேதமாக்கப்பட்ட கோவில்களைப் புனரமைக்க வேண்டும் என்றும் அங்கு அமைக்கப்பட்ட காவலரண்கள் அகற்றப்பட வேண்டும் என்றும் இந்து சமயப் பேரவை கோரிக்கைவிடுத்திருப்பது நியாயமானதே.

அது மாத்திரமல்ல கோவிற் சுற்றுடலிலும் மக்கள் அச்சமின்றி நடமாட வழி சமைக்கவேண்டும்.

### தமிழ்மொழி கலைத்திறன் போட்டி

(யாழ்ப்பாணம்)

தமிழ்மொழிக் கலைத்திறன் 1995ஆம் ஆண்டுக்கான போட்டிக்குரிய கையேடுகளும், அறிவுறுத்தல்களும் சகல கோட்டங்களுக்கும் அனுப்பிவைக்கப் பட்டுள்ளன. அவற்றைப்பாடசாலை அதிபர்கள் இன்று 20ம் திகதி திங்கட்கிழமை பெற்று போட்டிக்கான ஆயத்தங்களை மேற்கொண்டு குறித்த தினத்தில் போட்டிகள் சிறப்புற அமைவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். -ரி

### புலதும் பத்தும்

**அந்த விக்கிரகம்**

சென்னையில் 32அடி உயர ஆஞ்சநேயர் விக்கிரகம் பிரதிட்டை செய்யப்பட்டுள்ளது. அதற்கு 81 அடி உயரக்கோபுரம் கட்ட முதலில் அனுமதி கிடைக்கவில்லையாம். ஏன் தெரியுமோ?

அதற்கு அண்மையில் தான் விமான நிலையம் அமைந்துள்ளது. வாயுவைக் கிழித்துக்கொண்டு வரும் வானூர்திகளுக்கு வாயு புத்திரனின் வானுயர்ந்த கோபுரம் இடையூறாக அமையுமாம்.

ஆனால் அங்குள்ள பன்னாட்டு விமான நிலையப்பகுதியைச் சுற்றுச்சுள்ளி தனியாக நிறுவ உத்தேசித்திருப்பதால் தற்போது அனுமதி கிடைத்துள்ளது.

வழக்கமாக உயரமான சிலைக்கு அர்ச்சனை செய்ய குதிரை எனப்படும் தனி ஏணியுண்டு. ஆனால் இங்கு லிப்ட் (Lift) அமைத்துள்ளார்களாம் விஞ்ஞானமும் மெஞ்ஞானமும் இணைகின்றனவா?

— மயூரன்

## இராசி பலன்

20-02-1995

திங்கட்கிழமை

**(தமிழுக்கு மாசி -08)**

பஞ்சமி பிற்பகல் 12-43 வரை, சித்திரை முற்பகல் 11-27 வரை, சித்தாமிர்த யோகம் இராகு காலம் காலை 8-02 முதல் 9-32 வரை, சுப வேளை பகல் 12-32 முதல் 2-02 வரை.

மேடம்: அதிகாரிகள் உதவி, காரிய சித்தி, பயணநன்மை.

இடபம்: இனசன வருகை, மனக்களிப்பு, சுபச்செய்தி.

மிதுனம்: மதிப்புக் குறைவு, அவப்பெயர், அவநம்பிக்கை.

கடகம்: எதிரிகள் விரோதம், பணமுடை, உடல் அசதி.

சிங்கம்: நண்பர் உதவி, கலந்துரையாடல், சமசர முயற்சி

கன்னி: பயமிகுதி, குடும்ப பிரிவு, உதவியற்றநிலை.

துலாம்: கடினவேலை, கடன் வசூல், குடும்ப சுகம்.

விருச்சிகம்: சகோதர வெறுப்பு, உடல் அசதி, வீண் பகை.

தனுசு: பணிந்துபோதல், அகால உணவு, முன்கோபம்.

மகரம்: உண்மையை வளர்த்தல், இசை ஞானம், பாராட்டு.

கும்பம்: வைத்திய செலவு, உறவினர் அறிவுரை, தெய்வீகப் பணி.

மீனம்: தொழில் வெறுப்பு, அமைதியற்ற நிலை, சங்கடப் படல்.

— ஜோஸ்யர்

# கச்சதீவை பெற்றுக்கொள்ள தமிழக அரசு நடவடிக்கை

[சென்னை]

கச்சதீவுப்பகுதியை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர தமிழக அரசு முயற்சி செய்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையிடமிருந்து கச்சதீவை காலவரையற்ற குத்தகைக்கு பெற்றுத் தருமாறு தமிழகமுதல்வர் செல்வி ஜெயலலிதா மத்திய அரசிடம் வற்புறுத்தி வருவதாகவும் அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை கச்சதீவை விட்டுக்கொடுக்க இலங்கை அரசு தயாரில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்திய மத்திய அரசு கச்சதீவு தொடர்பாக இலங்கை அரசுடன் இதுபற்றி பேச ஆர்வம் கொண்டிருப்பதாக சொல்லப்படுகிறது.

இந்திய கடற்படை அதிகாரியான சார் நெஸ்ரோ இது தொடர்பாக கருத்து தெரிவிக்கையில் கூறியதாவது- 1974ம் ஆண்டு ஒப்பந்த 5-வது சரத்து இரு நாட்டு மீனவர்களும் கச்சதீவுப் பிராந்தியத்தில் மீன்பிடிக்க அனுமதியுண்டு எனக் கூறுகின்றது எனவும் 1976 ஒப்பந்தப்படி மன்னார் வளைகுடாவிலும் வங்காள விரிகுடாவிலும் அனுமதியின்றி ஒருநாட்டின் எல்லைக்குள் மற்றைய நாடு மீன்பிடித்தொழில் செய்ய முடியாது எனக் கூறுகின்றது என்றும் தெரிவித்தார்.

கச்சதீவுப்பகுதியை இந்தியாவுக்கு விட்டுத்தரவேண்டுமெனவும் பதிலாக இந்தியாவுக்கு உரித்தான 'வோட்ஜ்' மீன்பிடி மேடையில் இலங்கை மீனவருக்கு அனுமதி வழங்கலாம் எனவும் இந்தியதரப்பில் அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்குச் சொந்தமான கடற்பிராந்தியத்திற்குள் வைத்து இந்தியாவைச் சேர்ந்த 84 மீனவர்கள் சிறிலங்கா கடற்படையினரால் 1994 வரை சுட்டுக்கொல்லப்பட்டுள்ளதும் 60க்கு மேற்பட்ட பின்பிடி வள்ளங்கள் சேதமாக்கப்பட்டு மீனவர்கள்மீது தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதும் இந்தியாவை கொதிப்படையச் செய்திருப்பதனாலேயே கச்சதீவை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர தமிழ்நாடு விரும்புகிறது. ரி

### பயிலுனர் ஆசிரியர்கள் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

தொலைக் கல்வி பயிற்சி நெறியில் பயிலும் ஆசிரியர்கள் தங்களுக்குக் கிடைத்த நியமனத்திற்குரிய பாடத்தை மாற்றி பிறிதொரு பாடத்தில் பயிற்சியைப் பயிலுபவர்களாயிருப்பின், பாடமாற்றங்கள் பற்றி மேல்நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதற்காக யாழ். வலயம் 1 கல்வித் திணைக்களத்திற்கு இன்று20ம்திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு தவறாது வரும் வண்ணம் அறிவுறுத்தப்படுகின்றனர்.

நியமனக் கடிதம், பயிற்சி ஆசிரியராக நியமிக்கப்படுவதற்கு சமர்ப்பிக்கப்பட்ட பெறுபேறு கள்முலப்பிரதி, பாடமாற்றம் சம்பந்தமாக திணைக்களத்தினால் வழங்கப்பட்ட கடிதங்கள். ஆகிய ஆவணங்களுடன் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1995-02-20**
திங்கள் இரவு

08-01 தளிர்கள் சிறுவர்களுக்கான நிகழ்ச்சி
08-20 எங்களின் தேசம்
08 30 செய்திகள்
08-40 தரிசனம் - நிகழ்ச்சியில் முற்போக்கு எழுத்தாளர் திரு. ஐயாத்துரை சாந்தன் அவர்களுடனான செவ்வி என்பன இடம்பெறும்.

**1995-02-21**
செவ்வாய் காலை

07-02 மாவீரவணக்கம்
07-15 இன்றைய தாரகை
07-30 செய்திகள்
07-35 பத்திரிகைச் செய்திகள்
07-40 - ரயகப் பாடல்கள் என்பன இடம்பெறும்.

### தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

**1995-02-20**
திங்கள் மாலை

05-01 சிந்தனைச் சிதறல்
05-02 எழுச்சி கீதம்
05-10 புதியவை
05-15 ஆரியமுதம்
05-30 மாணவர்பக்கம்:- நிகழ்ச்சியில் கலந்துகொள்ளும் பாடசாலை யாழ். செங்குந்தா இந்துக் கல்லூரி
06-00 சிந்தனைக்குச் சில விஞடிகள்
06-02 நேயர் நெஞ்சம்
06-15 விளையாட்டுச் செய்திகள்
06-20 என் தெரிவு
06-30 மாலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

## மீன் பிடிக்கச் சென்றவர் சடலமாக மீட்பு

[நெல்லியடி]

மீன்பிடிக்கச் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக ஆற்றங்கரையிலிருந்து காவல் துறையினரால் மீட்கப்பட்டார்.

இப்பரிதாப சம்பவம் நேற்று காலை 9.30 மணியளவில் தொண்டமானாறு ஆற்றங் கரையில் இடம் பெற்றது.

அச்சுவேலி றெஜினேல்ட் வீதியைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான பொன்னன் தெய்வேந்திரம் (வயது 55) என்பவரின் சடலமே வல்வெட்டித்துறை தமிழீழ காவல் துறையினரால் மீட்கப்பட்டு, பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் விசாரணைக்காக ஒப்படைக்கப்பட்டது. [160 - சி]

## ஐ. தே. க. தலைமையுடன் முஸ்லிம்கள் முரண்பாடு

[கொழும்பு]

ஐ. தே. க. முஸ்லிம் முக்கியஸ்தர்களுக்கும் கட்சி தலைமைப் பீடத்துக்குமிடையே முரண்பாடுகள் தோன்றியுள்ளதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

திகாமடுல்ல மாவட்டத்தின் பிரதிநிதித்துவப்படுத்தி முஸ்லிம் ஒருவரை நியமிப்பதில் எழுந்துள்ள சர்ச்சை காரணமாகவே இந்த முரண்பாடுகள் தோன்றியுள்ளன.

தமது பிரதிநிதியை நியமிப்பதில் முஸ்லிம்கள் தீவிரமாக இருப்பது குறிப்பிடத்தக்கது. ரி

# கடவுச் சீட்டு மோசடி அம்பலம்

[கொழும்பு]

இருபது லட்சம் கடவுச்சீட்டுகளை அச்சிடுவதற்கு சட்டவிரோதமான முறையில் கேள்விப்பத்திரம் வழங்கப்பட்டது அம்பலத்துக்கு வந்துள்ளதாக 'ராவய' பத்திரிகை தெரிவித்துள்ளது.

இதேவேளை கடந்த காலங்களில் சுமார் 20,000 கடவுச்சீட்டுக்கள் சட்டவிரோதமாக வழங்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக விரிவான விசாரணைகள் மேற்கொள்ளப்படவி நடப்பதாக தற்போதைய அரசு அறிவித்துள்ளது.

முன்னைய ஐ. தே. க. ஆட்சியாளர் பலர் அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி சட்டவிரோதமான முறையில் கடவுச் சீட்டுக்களைப் பெற்றுள்ளனர் என்பது தெரியவந்துள்ளது. ரி

## விவசாயிகளை ஊக்குவிக்க பயிற்சி வகுப்புகள்

(யாழ்ப்பாணம்)

விவசாயிகளை ஊக்குவிக்கு முகமாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும், விவசாயத் திணைக்களமும் இணைந்து விவசாய போதனாசிரியர் பிரிவு ரீதியாக விவசாயப் பயிற்சி வகுப்புகளை நடாத்தி வருகின்றனர்.

இந்த வகையில் இன்று 20ம் திகதி காலை 10 மணிக்கு மல்லாகம் கல்லாரை ப. நோ. கூ. சங்கத்திலும், கரவெட்டி மத்தொளி சனசமூக நிலையத்திலும், நாளை காலை 10 மணிக்கு சிறுப்பிட்டி இறக்கு சனசமூக நிலையத்திலும், தருமங்கேணி இ. மு சங்கத்திலும், மாலை 3 மணிக்கு உடுவில் நாகேஸ்வரி வித்தியாலயத்திலும், 23ம் திகதி காலை 10 மணிக்கு புலோலி வியாபாரிமூலை சனசமூக நிலையத்திலும், சாவகச்சேரி தாவளை வற்றலை சனசமூக நிலையத்திலும், மாலை 3 மணிக்கு வட்டு திருஞானசம்பந்தர் வித்தியாலயத்திலும், 28ம் திகதி மாலை 3 மணிக்கு கைதடி மறவன் புலோ கிராமமுன்னேற்றச் சங்கத்திலும் இப்பயிற்சி வகுப்புக்கள் நடாத்த ஏற்பாடாகியுள்ளன.

எனவே இம் மாதாந்த பயிற்சி வகுப்புக்களில் பங்குபற்றி பயனடையுமாறு சகல விவசாயிகளுக்கும், கிராமிய உற்பத்திக் குழுவினர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

**சுத்தக் காற்றை சுவாசிக்க சூழலெல்லாம் மரம் நடுவோம்**

பாதுகாப்பு அமைச்சின்

# செயலர் பதவியில் சுதந்திரத்தை இழக்கநேரிடும்

## — சந்திரானந்த கூறுகிறர்

(கொழும்பு)

சுதந்திரத்தை இழக்கவேண்டும் என்பதற்காகத்தான் பாதுகாப்பு அமைச்சின் செயலர் பதவியை ஏற்பதற்குத் தயங்கினேன். ஆனல் ஜனதிபதி சந்திரிகா என்னை இப்பதவியை ஏற்கச் செய்தார்.

இவ்வாறு பாதுகாப்பு அமைச்சின் புதிய செயலராகப் பதவியேற்ற திரு. சந்திரானந்த டி சில்வா தெரிவித்துள்ளார்.

நான் அனுபவித்த சுதந்திரத்தை இழந்து விடுவேனே என்ற அச்சம் இருந்தபோதிலும், புதிய பதவியை ஏற்காமல் நிராகரிக்க என்னல் முடியவில்லை எனவும் தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சின் செயலராகப் பதவி ஏற்குமாறு திரு. சந்திரானந்த டி சில்வாவுக்கு, ஜனதிபதி சந்திரிகா பலத்த வற்புறுத்தலைக் கொடுத்து வந்ததும், அதன் பின்னரே அவர் தயக்கத்துடன் இப்பதவியை ஏற்றுள்ளதாகவும் கொழும்புப் பத்திரிகைகள் கூறியுள்ளன. -

# 175 கிராமசேவையாளருக்கு மீண்டும் வேலை வாய்ப்பு

(கொழும்பு)

அரசியல் காரணங்களுக்காக 1977ம் ஆண்டில் தங்களது தொழில்களை இழந்த 175 கிராம சேவையாளர்களுக்கு மீண்டும் பதவி வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

வேலையிழந்த நாட்களில் அவ்வூழியர்கள் பெறவேண்டிய சம்பளம், மற்றும் சம்பள அதிகரிப்பு போன்றவையும் வழங்கப்படும் என்றும் அரசாங்கம் மேலும் அறிவித்துள்ளது.

இதேபோன்று 1977ம் ஆண்டு வேலைநிறுத்தம் செய்ததில் பதவி இழந்த பல தரப்பட்ட ஊழியர்களுக்கு அரசாங்கம் மீண்டும் தொழில்களை வழங்கி வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (ம-சி)

# 8,000 பரல் ம.எண்ணெயுடன் ‘மாகோ’ வருகிறது

(நெல்லியடி)

கொழும்பில் இருந்து 8,000 பரல் மண்ணெண்ணெயுடன் புறப்பட்ட மாகோ கப்பல், இன்று காலை பருத்தித்துறைத் துறைமுகத்தை வந்தடையும் என எதிர்பார்க்கபபடுகிறது.

இக்கப்பலில் யாழ். கல்வித் திணைக்களத்திற்குப் பாடசாலைப் மாணவர்களின் இலவச பாடப் புத்தகங்கள் கொண்டுவரப்படும் எனத் துறைமுக வட்டாரங்கள் தெரிவித்தன.

இக்கப்பலில் மேலும் பல பொருட்கள் எடுத்து வரப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 160-சி

நாலாம் கட்டப்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மும் நிர்ணயிக்கப்படவில்லை என்றும் அமைச்சர் தர்மசிறி சேனநாயக்க நேற்று நடந்த பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவித்தார்.

இதேவேளை நாலாம் சட்டப் பேச்சு அடுத்தவாரம் நடைபெறுமென திரு. பல பத்தபெண்டியும் அடுத்த மாதத்திற்கு முன் இப்பேச்சுக்கள் நடைபெறுமென அமைச்சர் ரத்வத்த தெரிவித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. (ம சி)

# வடபகுதிப் பயணிகளிடம் ரயிலில் கொள்ளை

(கொழும்பு)

கொழும்பிலிருந்து வவுனியா நோக்கி வந்த இரவு தபால் ரயிலில் பயணம் மேற்கொண்ட வடபகுதி பயணிகளின் நகைகள், பணம் என்பன ஆயுதம் தாங்கிய கொள்ளையர்களால் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை இரவு நடைபெற்ற இத்துணிகர கொள்ளைச் சம்பவமானது மாகோவுக்கும் அநுராதபுரத்திற்கும் இடையில் இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவம் குறித்து பொலிசில் புகார் தெரிவிக்கப்பட்டபோதிலும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாக தெரியவில்லையெனவும் பயணிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை அடுத்த நாள் காலை முதல் நண்பகல் வரை ரயில் பயணிகள் யாவரும் தாண்டிக்குளம் பகுதியில் இராணுவத்தினரால் தடுத்து வைக்கப்பட்டபின்பே தொடர்ந்து பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டனராம். (க - சி)

கச்சதீவுக்கு அருகில்

# இலங்கைக் கடற்படை சூடு தமிழக மீனவர் காயம்

(சென்னை)

கச்சதீவுக்கு அருகில் மீன் பிடித்துக்கொண்டிருந்த இராமநாதபுரம் மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் சுட்டதில், ஒரு மீனவர் படுகாயத்துக்குள்ளானர். இவர்களுடன் சென்ற ஏனைய மீனவர்கள் காயங்கள் எதுவுமின்றித் தப்பித்துக் கொண்டனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம் பெற்றது. படுகாயமடைந்தவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அண்மைக் காலமாகத் தமிழக மீனவர் மீது, இலங்கைக் கடற்படையினர் தாக்குதல்களை மேற்கொண்டு வருவதால் பலர் பலியாகியுள்ளதும் தெரிந்ததே. கே-சி

சமாதான முயற்சி

1-ம் பக்கத் தொடர்ச்சி)

முயற்சியைத் தாமதம் செய்வதாகக் கூறினர்.

நான்காவது கட்டப் பேச்சுவார்த்தையை விரைவில் ஆரம்பிக்குமாறும், அதற்கான நடவடிக்கைகளைத் துரிதமாக மேற்கொள்ளுமாறும் அரசை வற்புறுத்தும்படி, அண்மையில் யாழ். வந்த வெளிநாட்டுக் கண்காணிப்புக் குழுவினரிடமும், அவர்களுடன் வந்த இராணுவ அதிகாரியான பிரிகேடியர் பீரிஸிடமும் புலிகள் வற்புறுத்தி இருந்ததும் குறிப்பிடத்தக்கது. -சி

# இலங்கை அணி நியூஸிலாந்து பயணம்

]கொழும்பு]

அர்ஜுனரணதுங்க தலைமையிலான 16 வீரர்கள் அடங்கிய இலங்கை கிரிக்கெட் அணி இன்று 20-ம் திகதி நியூசிலாந்து பயணமாகிறது.

விக்கெட் காப்பாளர் சாமர துணுசிங்க வேகப்பந்து வீச்சாளர் ஜெடிகமகே, சுழல்பந்து வீச்சாளர் ஜயந்தசில்வா ஆகியோர் புதிதாக இவ்அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டவர்களாவர்.

இலங்கைஅணி இருடெஸ்ட் போட்டிகளிலும் மூன்று ஒருநாள் போட்டியிலும் கலந்து கொள்ளும்.

ருெஷான் மகாநாம உடல் நலம் பாதிப்புற்றிருப்பதால் இச்சுற்றுலாவில் கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (க-சி]

சார்க் மாநாட்டை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்வரும் ஏப்ரல் மாதம் புதுடில்லியில் இம்மாநாடு நடக்கவுள்ளது. இக்காலப்டகுதியில பாகிஸ்தான் பிரதமர் திருமதி பெனசிர் பூட்டோ அமெரிக்கா செல்லவுள்ளதாலேயே பாகிஸ்தான் இம்மாநாட்டை ஒத்திவைக்குமாறு கேட்டுள்ளது.

இம்மாநாடு பெரும்பாலும் எதிர்வரும் மே மாதம் நடைபெறலாமென எதிர்பார்க்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

# தென்பகுதிச் சிறைகளில் தமிழ் கைதிகளுக்கு ஆஸ்பத்திரி வசதி மறுப்பு

(கொழும்பு)

தென்பகுதியில் உள்ள சிறைச்சாலை ஆஸ்பத்திரி வார்டுகளில், தமிழ்க் கைதிகளுக்கு அனுமதி மறுக்கப்பட்டு வருவதாகப் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தெற்கின் பல பகுதிகளிலும் உள்ள சிறைச்சாலைகளில் 500க்கும் மேற்பட்ட, தமிழ்க் கைதிகள் பல வருடமாக விசாரணை எதுவுமின்றித் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

தற்போது இவர்கள் சிறைச்சாலைகளில் பல வசதியீனங்களை எதிர்நோக்குவதுடன், அங்குள்ள ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை பெறவும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுறகிறது. ரி-சி

மலைநாட்டு

## இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு

(கொழும்பு)

மலைநாட்டு இளைஞர்கள், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் பொருட்டு, ஒரு மததிய செயல்பாட்டு நிறுவனமொன்று ஆரம்பிக்கப்பட இருக்கின்றது.

இந்த நிறுவனம் ஹட்டனில் அமையுமென்றும், இதற்கான அனுமதியை அமைச்சர் எஸ். தொண்டமான் அமைச்சரவையிடமிருந்து பெற்றுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ம-சி)

இரு வெளிநாட்டவரை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆறு அங்கத்தவர்களைக் கொண்ட மோதல் தவிர்ப்புக் கண்காணிப்புக்குழுவை, அரசு நான்காகக் குறைத்ததை விடுதலைப்புலிகள் ஆட்சேபித்திருந்ததுடன், மேலும் இரு வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் இக்குழுக்களுக்குத் தலைமைதாங்க வேண்டியதன் அவசியத்தையும் அண்மையில் யாழ்ப்பாணம் வந்த வெளிநாட்டுக் கண்காணிப்புக் குழுத் தலைவர்களிடம் வலியுறுத்தி இருந்தனர்.

இதையடுத்து மேலும் இருவரை இங்கு வரவழைக்க அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. -சி

ஆயுதக் கொள்வனவு

1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாறு கோட்டே பிரதம நீதவான்கடந்த வெள்ளிக்கிழமை உத்தரவிட்டிருந்தார்.

இதேவேளை பாதுகாப்பு அமைச்சின் முன்னுள் செயலர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கவும் இதேபோன்றதொரு விசாரணைக்குடபடுத்தப்பட்டுள்ளதும் தெரிந்ததே. (ரி-சி)

யாழ்ப்பாணத்தில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்ற பத்திரிகையாளர்மகாநாட்டிலே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; புனர்வாழ்வு நடவடிக்கைக்கு தேவையான பொருட்களை ஏற்றிச் செல்வதற்கு கப்பல்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இலங்கை சம்பந்தமாக வெளிநாடுகளில் நிலவும் தப்பபிப்பிராயங்கள் அனைத்தும் தற்போது நீக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். [ம - சி]

மோதல் தவிர்ப்பை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தால் கண்காணிப்பு நடவடிக்கைகள்மேற்கொள்வதில் நடைமுறைச் சிக்கல்கள் எழவே செய்யும் என வெளிநாட்டு கண்காணிப்பு குழுக்களின்தலைவர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்குமிடையே நடைபெறக்கூடிய பேச்சுக்களில் போர்த்தவிர்ப்பு தொடர்பாக மேலும் உறுதியான வரையறைகள் வகுக்கப்படுமேயானல் தாம் கண்காணிப்பை ஒழுங்காகச் செய்யலாமென வெளிநாட்டு கண்காணிப்பு குழுவினர் கூறுகின்றனர்.

இரு தரப்பினருமே நிரந்தரமான போர் நிறுத்தத்தை நோக்கி முனைப்பை காட்டும் விதத்தில் செயற்பட்டால் தான் கண்காணிப்பு குழுவினரின் கடமைகள் இலகுவாக இருக்கும் எனவும் அவர்கள் கருதுகின்றனர்

தற்போது கடைப்பிடிக்கப்படும் மோதல் தவிர்ப்பு உடன்பாட்டை பொறுத்தவரை மீறல்களை இனம்கண்டு தீர்வை காண்பதற்குரிய வகையில் போதுமான விதிமுறைகள் இல்லை என்பதே இவர்களின் கருத்தாக உள்ளது.

ஏற்கனவே இலங்கை வந்து சேர்ந்த கனடா, நோர்வே, நெதர்லாந்து நாடுகளைச் சேர்ந்த கண்காணிப்பு குழுக்களின் தலைவர்கள் விடுதலைப் புலிகள் இயக்க தலைவர் திரு வே. பிரபாகரன் மற்றும் ஜனதிபதியையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளனர்

இக்குழுவினர் தற்போது கொழும்பில் தங்கியிருப்பதாகவும் இதுவரையும் தமது கண்காணிப்பு பிரதேசங்களில் கடமையாற்றுவதற்கு இக்குழுவினர் செல்லவில்லை என்றும் தெரிவிக்கப்படுசிறது. (ர்-சி)

வடமராட்சிக் கடலில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வாக்க அதிகாரிக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கடந்த சில வாரங்களாக பெருமளவில் இந்திய மீனவர்கள் இப்பகுதியில் வந்து மீன் பிடிப்பதால் வடமராட்சிப் பகுதி மீனவர்கள் பலதொல்லைகளை எதிர்நோக்கி வருவதும் தெரிந்ததே. (160-சி)

இரணவிலவ்வல்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தோடு, துப்பாக்கிப் பிரயோமும் செய்துள்ளனர். இதனல் தற்போது அப்பகுதியில் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

வொய்ஸ் ஒவ் அமெரிக்கா வானெலி நிலையத்தின் வேலைகளை மீண்டும் ஆரம்பிக்க பொது சன முன்னணி அரசு அனுமதி வழங்கியதைத் தொடர்ந்து இப்பகுதியில் பொதுமக்கள் பலத்த எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதும் இவற்றை முறியடிக்க அப்பகுதியில் இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளதும் அங்கு நிலைமைகளை மோசமடையச் செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [ம-சி)

## பிறப்புச்சான்றிதழ் ஒரு பிரதி மட்டும் வழங்கப்படும்

(பருத்தித்துறை)

கிளிநொச்சி மேலதிக மாவட்டப் பதிவாளர் அலுவலகம், 1954ம் ஆண்டிற்குப் பின்னர் பிறந்தவர்களுக்கான இரண்டு பக்கச் சான்றிதழ்கள் அவசிய தேவைகளுக்காக ஒரு பிரதி மட்டுமே வழங்கப்படும் என கிளிநொச்சி மேலதிக மாவட்டப் பதிவாளர் திரு. கே.என். அல்போன்ஸ் அறிவித்துள்ளார். ·52

## வயோதிபரிடம் வழிப்பறி

[அரியாலை]

அரியாலை புனித யூதாததேயூ ஆலய வழிபாட்டுக்குச் சென்று வீடு திரும்பிய வயோதிபரிடம் அறுநூறு ரூபாய் அபகரிக்கப்பட்டது.

கடந்த 17ம் திகதி வெள்ளிக்கிழமை இரவு 7 மணியளவில் வீடு திரும்பிக் கொண்டிருந்த வேளை க. மார்க்கண்டு (வயது 72) என்பவரிடமே இனந்தெரியாத சிலர் வழிப்பறி செய்ததாக கூறப்படுகிறது, 59

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 20-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office SriLanka under Licence Number B/16336/B-